# மெட்ரோ ரயில் போக்குவரத்து இன்று மாற்றம்

**சென்னை, பிப். 25–**

சென்னை மெட்ரோ ரயில் போக்குவரத்தில், இன்று மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் சேவை, வழக்கமாக காலை, 8:00 மணி முதல், 10:00 மணி வரையும், மாலையில், 4:00 மணி முதல் இரவு, 7:00 மணி வரையும், 5 நிமிட இடைவெளியில் இயக்கப்படுகின்றன.

இந்த போக்குவரத்தில், இன்று மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இன்று காலை, 7:00 மணி முதல், 11:00 மணி வரையும், மாலை, 4:00 மணி முதல், இரவு, 8:00 மணி வரையும், 5 நிமிட இடைவெளியில் ரயில்கள் இயக்கப்படும் என, அறிவிக்கப்பட்டுள்ளது.